
10/=

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 89 | வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 11 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

## நான் ஒரு திருடன் அல்ல



"நான் ஒரு திருடன் அல்ல, என இந்த நாட்டில் இருக்கும் எத்தனை அரசியல்வாதிகளால் சொல்ல முடியும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், அத்தகைய ஒரு அரசியல் கட்சி தலைவர் என்று என்னால் சொல்ல முடியும் என நினைக்கும் போது மிகவும் பெருமையாக இருக்கிறது" என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு கூடத்தில் நடைபெற்ற, தலைமைத்துவப் பயிற்சி பட்டறையில் விசேட அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றிய அவர்,

அரசாங்கத்தின் முன்னணி அமைச்சர் ஒருவர், அதிலும் ஆளும் அரசாங்கக் கூட்டணியின் பிரதான கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க,

06

## ஆயுள் முழுவதும் சிறையிலிருங்கள்




ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற ராபர்ட் பயஸ், ஜெயக்குமாரை விடுவிக்க முடியாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த அறிவித்தலை சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருவரும் ஆயுள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு பதில் தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ரோபேர்ட் பயஸ் ஆகிய 7 பேரும் கடந்த 26 ஆண்டுகளாக சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இதனிடையே ரோபேர்ட் பயாஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகிய 2 பேரும் கடந்த 2012ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தனர். 'ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளோம். ஆயுள் தண்டனை கைதிகள் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் 14 ஆண்டுகளில் விடுதலை செய்யப்படுவது வழக்கம்.

ஆனால், தமிழக அரசு எங்களை மட்டும் 20 ஆண்டுகள் கழிந்த பிறகும் விடுவிக்காமல் உள்ளது." என குறிப்பிட்டிருந்தனர்.(எ)

## உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பு



உள்ளூர் உற்பத்தி பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பல முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இந்த வருட இறுதிக்கு எமது மாவட்டத்தில் 20 ஏற்றுமதியாளர்களை உருவாக்கவேண்டும் திட்டமும் உள்ளது என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இன்று சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாகிய உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ் மாவட்டத்தில் வேலை வாய்ப்பின்மை முக்கிய

06

# சமுர்த்தி வெட்டு இல்லை

## ஜனாதிபதி, அமைச்சர் உறுதி





சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை எக்காரணம் கொண்டும் குறைக்கப்பட மாட்டாது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த அமைச்சர் 14 லட்சத்து 25 ஆயிரத்து 661 சமுர்த்திப் பயனாளிகள் நாட்டில் காணப்படுகின்றனர்.

இவர்களுக்காக அரசாங்கம் நான்காயிரத்து 200 கோடி ரூபா நிதியை ஒதுக்கியிருந்த போதிலும், செயற்பாட்டு ரீதியில் ஒதுக்கப்பட்ட தொகை ஆயிரத்து 200 கோடி ரூபா மட்டுமே என்றும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். இதேவேளை வளவைப்பகுதி விவசாயிகளுக்கான காணி உறுதிகள்

06

## கூண்டோடு விலகவேண்டும் கூட்டு எதிர்க்கட்சி



ரவி கருணாநாயக்க போன்று கூட்டு எதிர்க்கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களும் இராஜினாமாச்செய்ய வேண்டும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

ரவி கருணாநாயக்க உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுக்களுக்காக பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதனை முன்மாதிரியாகக் கொண்டு கூட்டு எதிர்க்கட்சியினரின் பெரும்பான்மையான உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்வது அவசியமாகும். ராஜபக்ச

06

## எல்லாம் முடியவில்லை



இலங்கை மத்திய வங்கியின் பிணை முறிகள் விற்பனையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இவ்வாறான நிலையில் கூட்டாக இடம்பெற்ற திருட்டொன்றில் ஒருவர் பதவி விலகுவதனால் மட்டும் அனைத்தும் நிறைவடைந்து விட்டது எனக் கருதவேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம்.பி தெரிவித்துள்ளார்.

திருட்டு இடம்பெற்றிருக்கின்றது. அதில் பங்குகொண்டுள்ளவர்கள் யார்? அர்ஜூன் மகேந்திரா?, அர்ஜூன் அலோசியஸா? யாராக இருந்தாலும்

06

# உலக சைவ இளையோர் மாநாடு





உலக சைவ இளையோர் மாநாடு, யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது. அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இம் மாநாடு இடம் பெறுகிறது.

இன்று காலை நல்லூர் ஆலயப்பகுதியில் இருந்து மாநாட்டுக்கான பேரணி ஆரம்பமாகியது. பேரணியை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆரம்பித்துவைத்தார். உலக சைவ இளையோர் மாநாடு இன்றும் நாளையும் நடைபெறுகிறது. (உ-16)

## மாகாணசபைத் தேர்தல்

# முதல்வர்களுடன் பேச்சு



மாகாணசபைத் தேர்தல் குறித்து முதலமைச்சர்களுக்கு இடையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட உள்ளது.

மாகாணசபை தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டுமென மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குறிப்பிட்ட அவர், மாகாணசபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது தொடர்பில், மாகாண முதலமைச்சர்களுக்கு இடையில் மகாநாடு ஒன்று நடத்தப்பட உள்ளது. மாகாணசபைத் தேர்தல் ஒரே நாளில் நடத்தப்படுவது வரவேற்கப்பட வேண்டியதாகும்.

1988ஆம் ஆண்டு முதல் மாகாணசபை தேர்தல் ஒரே நாளில் நடத்தப்பட்டது. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக 1999ஆம் ஆண்டின் பின்னர் மாகாணசபைத் தேர்தல் ஒரே நாளில் நடத்தப்படவில்லை.

மாகாணசபைகளின் பதவிக் காலம் பூர்த்தியானதன் பின்னர் ஆளுநர்கள், மாகாண நிர்வாகத்தை பொறுப்பேற்றுக்கொள்வது அரசியல் பொறுப்புக் கூறுதல்களுக்குத் தடையாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். (உ)

# நீர்வேலியில் விபத்து!



யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்று, நீர்வேலிச் சந்திக்கருகில், கட்டுப்பாட்டை இழந்தமையால் விபத்துக்குள்ளானது. இவ்விபத்து இன்று காலை 8.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது, வீதியிலிருந்து விலகிச் சென்ற வான், அருகிலிருந்த வேலியைப் பிரித்துக் கொண்டு காணிக்குள் நின்ற தென்னை மரத்துடன் மோதியது. விபத்தில் வான் சேதத்துக்குள்ளானபோதும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ஐ)

# காலி வீதியில் விபத்து வெளிநாட்டு தம்பதி பலி

காலி - மாத்தறை பிரதான வீதியின் இடம்பெற்ற வாகன விபத்தில் வெளிநாட்டு தம்பதி உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து மிரிஸ்ஸ பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. தனியார் பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ரஷ்ய நாட்டுத் தம்பதியினரே உயிரிழந்துள்ளனர். விபத்தை ஏற்படுத்திய பஸ் வண்டிச் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். பஸ் சாரதியைக் கைது செய்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாத்தறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

# நாட்டைவிட்டு வெளியேறும் வைத்தியர்கள்

வைத்தியர்கள் மற்றும் விஷேட வைத்திய நிபுணர்களுக்கு நாட்டின் சுகாதாரத் துறைக்குள் நிலைத்திருக்க முடியாத நிலை காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் கூறியுள்ளது.

இதன் காரணமாக சில வைத்தியர்கள் தமது ஆரம்ப நியமனங்களைக் கூட பெற்றுக் கொள்வதில்லை என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா கூறினார்.

அதேபோன்று வைத்தியர்கள் நாட்டை விட்டு செல்லும் நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். (உ)

# கந்தப்பளையில் கைக்குண்டு மீட்பு



நுவரெலியா கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தபளை நகர பிரதான குப்பை மேடு அமைந்திருக்கும் கந்தப்பளை இராகலை பிரதான வீதிக்கு அருகில் நேற்று மாலை கைக்குண்டு ஒன்று கந்தப்பளை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதான வீதியில் சென்ற பாதசாரி ஒருவர் கந்தப்பளை பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டை கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து நுவரெலியா பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் தெரிவித்த பொலிஸார் இக்கைகுண்டை மீட்பதற்கு இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவின் உதவியை நாடினர். அதேவேளை மாலை 7.45 மணியளவில் கந்தப்பளை பகுதிக்கு விரைந்த குண்டு செயலிழக்கும் பிரிவு இக் கைக்குண்டினை மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# மயானங்களை அகற்றக்கோரி புத்தூரில் ஆர்ப்பாட்டம்




மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மயானங்களை அகற்றக்கோரி புத்தூரிலுள்ள வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைமையகம் முன் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

புத்தூர் மேற்கிலுள்ள மயானத்தை அகற்றக்கோரி கலைமதி கிராம மக்கள்கடந்த ஒரு மாதகாலமாகத் தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் இன்றைய போராட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. (உ)

# மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் படுகாயம்

வயோதிபர் ஒருவர் மோட்டர் சைக்கிளில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது

குறித்த வயோதிபர் அச்சுவேலிப்பகுதியில் நேற்றைய தினம் அதிகாலை நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். அதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியதாகக் கூறப்படுகின்றது.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கந்தன் சிவபாதம் (வயது-69) என்ற வயோதிபரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (உ)

# மகிந்தவின் மனைவியை கைது செய்ய முனைப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ச எதிர்வரும் நாட்களில் கைது செய்யப்படவுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவரைக் கைது செய்து விளக்க மறியலில் வைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறித்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 15ஆம் திகதி ஷிரந்தி ராஜபக்ச குற்ற விசாரணை திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு அவர் கைது செய்யப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. ரகர் வீரர் வசீம் தாஜூடீன் கொலை வழக்குத் தொடர்பிலேயே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். (உ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# சமூர்த்திப் பயனாளிகள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் அரசாங்கத்தால் வழங்கப்படும் சமுர்த்தி உதவு தொகைகளை சமுர்த்திப் பயனாளிகளுக்கு முறையாக வழங்காமலும், உதவு தொகைகள் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, இன்று லிந்துலை தலவாக்கலை நகரசபைக்கு அருகாமையில் ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியின் ஓரத்தின் சமுர்த்தி உதவு தொகை பெறும் சுமார் 200ற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (உ)





# கருணாநிதிக்கு மெழுகுச்சிலை

முரசொலி' காட்சி அரங்கத்தில் கருணாநிதியின் மெழுகுச் சிலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. 'முரசொலி' நாளிதழின் பவள விழாவையொட்டி, சென்னைக் கோடம்பாக்கத்தில் உள்ள அலுவலக வளா கத்தில் பிரபல கலை இயக்குநர் எஸ்.டி.செல்வன் குழு வினரால் 'முரசொலி' அலுவலகத்தின் ஆரம்ப காலத் தோற்றம் மற்றும் தற்போதைய தோற்றத்துடன் காட்சி அரங்கம் அமைக்கப்பட்டது.
இதன் திறப்பு விழா நேற்றுக் காலையில் நடைபெற்றது. விழாவுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்கினார். தி.மு.க. செயல் தலைவரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் துரைமுருகன், முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், 'முரசொலி' நிர்வாக மேலாண்மை இயக்குநர் உதயநிதி ஸ்டாலின், ஆசிரியர் முரசொலி செல்வம், காங்கிரஸ் முன்னாள் எம்.பி. பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.
காட்சி அரங்கில் தி.மு.க. தலைவர் கருணாநிதி 'முரசொலி' அலுவலகத்தில் அமர்ந்திருப்பது போன்று தத்ரூபமான மெழுகுச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. கருணாநிதி எழுதிய கடிதங்கள், முக்கிய செய்திகளின் தொகுப்பு களும், 'நெஞ்சுக்கு நீதி' உட்பட அவர் எழுதிய புத்தகங் களும் இடம் பெற்றுள்ளன. (இ)

# அமெரிக்க விமானங்களை தகர்க்க முயன்றவர் கைது




துருக்கி விமானத் தளத்தில் இருந்த அமெரிக்க விமானம் மீது ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல் நடத்த முயன்ற ரெனாட் பகேவ் என்ற ரஷ்ய இளைஞரைத் துருக்கிப் பொலிஸார் கைது செய்துள் ளனர். கைது செய்யப்பட்ட இளைஞ ருக்கும், ஐ.எஸ் தீவிரவாதக் குழுவுக் கும் தொடர்பு இருப்பதாகப் பொலி ஸார் சந்தேகமடைந்துள்ளனர்.
ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க விமானப்படை துருக்கி விமானத் தளத்தைப் பயன்படுத்தி வரு வது குறிப்பிடத்தக்கது. அதைத் தடுக் கவே இவ்வாறான நாசகார வேலை களில் ஐ.எஸ் அமைப்பினர் இறங்கியுள் ளதாகக் கூறப்படுகின்றது. (இ)

# சீனாவைச் சீண்டும் அமெரிக்கக் கப்பல்



தென் சீனக் கடற்பகுதியில் சீனாவால் உருவாக்கப்பட்ட செயற்கைத் தீவுக் குச் சற்றுத்தொலைவில் அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று நேற்றுப் பய ணித்ததால் சர்ச்சை நிலை தோன்றி யுள்ளது.
தென் சீனக் கடற்பகுதியை சீனா, தாய்வான், வியட்நாம், இந்தோனே ஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் உள் ளிட்ட நாடுகள் தமக்கே சொந்தம் என்று கூறி வருகின்றன. இயற்கை வளம் நிறைந்த இந்தப் பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்றான ஸ்பிராட்லி தீவில் சீனா செயற்கை யாகத்தீவு ஒன்றை அமைத்துள்ளது. சீனா இந்தப் பகுதியை ஆக்கிரமித்த மைக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.
இந்த நிலையில், சீனாவின் செயற் கைத் தீவுக்கு சமீபமாக அமெரிக்கா வின் போர்க் கப்பல் ஒன்று நேற்றுக் கடந்து சென்றது.
இந்தப் பகுதியில் சுதந்திரமாக அனைத்துக் கப்பல்களும் பயணிப் பதை உறுதி செய்ய அமெரிக்கா முனைப்புடன் உள்ளது. ஆனால் இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரி வித்து வருகிறது.
இந்த நிலையில், சீனாவின் ஆக்கிர மிப்புக்குச் சவால் விடும் வகையில் அமெரிக்காவின் ஜோன் எஸ். மெக்கெய்ன் என்ற போர் கப்பல் தென் சீன கடற்பகுதியில் அமைந் துள்ள சீனாவின் செயற்கை தீவுக்கு அருகே நெருங்கி சென்றமையால் இருநாட்டு உறவுநிலையில் முறுகல் ஏற்பட்டுள்ளது. (இ)




# 2 அணுகுண்டுகளில் தப்பித்த மனிதன்

ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீது 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அமெரிக்காவால் அணுகுண்டு வீசப்பட்டது. மூன்று தினங்களுக்குப் பின்னர் நாகசாகி நகரத்தின் மீதும் அமெரிக்கா அணுகுண்டைப் போட்டது.
இந்தக் குண்டு வீச்சினால் ஹிரோஷிமாவில் மட்டும் சுமார் 1,40,000 பேர் இறந்திருப்பதாக வும் 74,000 பேர் நாகசாகியில் மரணமடைந் துள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.
இந்த நிலையில் இந்த இரண்டு அணுகுண்டு களிலும் பாதிக்கப்பட்ட ஜப்பான் நாட்டை சேர்ந்த சுடோமு யமாகுச்சி என்பவர் 90 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளார்.
நாகசாகியில் அணுகுண்டு வீசப்பட்ட போது, சுடோமு அங்குதான் இருந்துள்ளார். வியாபார நிமித்தமாக நாகசாகிக்குச் சென்றிருந்த அவர், வீட்டுக்குப் புறப்பட தயாராக இருந்த போது தான் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.
அன்றைய தினம் அவர் முழுவதும் விமானத் தளத்தில் பதுங்கியிருந்து மறுநாள் வீட்டுக்குச் சென்றுள்ளார்.
ஆனால் சொந்த ஊரான ஹிரோஷிமாவில் சுடோமு கால் வைத்தவுடனே அங்கு அடுத்த அணுகுண்டு வீசப்பட்டுள்ளது.74 ஆயிரம் உயிர்களைக் காவு வாங்கிய அந்த அணுகுண் டுத் தாக்குதலில் இருந்தும் சுடோமு அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பினார்.
இதையடுத்து அணுகுண்டு வீசப்பட்டு 60 ஆண்டுகள் கழித்து, சுடோமுவின் 90 ஆவது வயதில், இரண்டு அணுகுண்டுகளையும் தாங் கிய ஒரே மனிதர் என்று ஜப்பான் அரசு அதி காரபூர்வமாக அறிவித்துக் கௌரவித்தது.
அந்த அணுகுண்டுத் தாக்குதலில் சுடோமு தன்னுடைய ஒரு காதின் கேட்கும் திறனை சற்று இழந்திருந்தார்.
அணுகுண்டின் கதிர்வீச்சால் புற்றுநோய் மற் றும் கல்லீரல் நோயினால் பாதிக்கப்பட்ட பலரும் பிற்காலங்களில் அடுத்தடுத்து உயிரிழந்த நிலையில், 93 வயது வரை வாழ்ந்த சுடோமு 2010 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

# இம்ரானுக்கு சிக்கல்

முன்னாள் கிரிக்கெட் வீரரும், பாகிஸ் தான் தெக்ரீக் இ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கான், தேர்தல் ஆணையகத்தில் தாக்கல் செய்த ஒரு மறுஆய்வு மனுவில், தேர்தல் ஆணைய கத்துக்கு எதிராகக் கருத்துத் தெரிவித் திருந்தார்.
இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாகிஸ்தான் தெக்ரீக் இ இன்சாப் கட்சியில் இருந்து பிரிந்து வந்த அக்பர் எஸ். பாபர் என்ப வர் மனுத் தாக்கல் செய்தார். அதைத் தேர்தல் ஆணையகம் தீர்ப்பாய விசார ணைக்கு ஏற்றது.ஆனால் அதை விசாரிக் கும் உரிமை தேர்தல் ஆணையகத்துக்கு இல்லை என்று பதில் மனுத்தாக்கல் செய்தார் இம்ரான் கான்.
இந்த நிலையில், தேர்தல் ஆணைய கத்தின் 5 உறுப்பினர்கள் அடங்கிய தீர்ப்பாயம் நேற்றுத் தனது தீர்ப்பை வழங்கியது. தீர்ப்பில், இம்ரான்கான் மீதான அவமதிப்பு வழக்கில் விசார ணையை நடத்துவது தனது அதிகார வரம்பில் வருகிறது எனத் திட்டவட்ட மாகக் கூறி, இம்ரான்கானின் பதில் மனுவை அதிரடியாக நிராகரித்து விட் டது. இதன் காரணமாக இம்ரான்கான் மீதான அவமதிப்பு நடவடிக்கை தொடர்பில் விசாரணை நடைபெற வுள்ளது. (இ)

# நீயா? நானா? நேரடி மோதல் ஆரம்பம்



"துணைப் பொதுச் செயலாளராக நான் செயற்பட யாரும் தடைவிதிக்க முடியாது. கட்சி விரோதச் செயல்களில் ஈடுபட்டால் எடப்பாடி பழனிச்சாமி மீது நடவடிக்கை எடுக்கப்படும் "என்று டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.
அதிமுகவின் துணை பொதுச் செய லாளர் டிடிவி தினகரனின் அறிவிப்புகள் எதுவும் கட்சியைக் கட்டுப்படுத்தாது என்று ஈபிஎஸ் தலைமையிலான கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கழக சட்ட விதிகளின்படி, டிடிவி தின கரனின் துணை பொதுச் செயலாளர் நியமனமும் செல்லாது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.
இந்த நிலையில் இதுதொடர்பாக தஞ் சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய டிடிவி தினகரன், "சசிகலா சொன்ன தால் முதல்வராகப் பொறுப்பேற்றவர் எடப்பாடி பழனிச்சாமி. அவர் எப் போது தேர்தல் ஆணையத்தின் தலை வராக ஆனார் என்று தெரியவில்லை.
ஆர்.கே.நகர் தேர்தல் பிரசாரத்தின் போது எங்கள் கட்சியின் சின்னமும், பெயரும் முடக்கப்பட்டது. ஆனால் தற்போது டிடிவி தினகரனின் அறிவிப் புகள் எதுவும் கட்சியைக் கட்டுப்படுத் தாது என்று அவர்கள் தீர்மானம் நிறை வேற்றியுள்ளனர். ஆனால் தலைமைக் கழக அறிக்கையில், அனைத்திந்திய அதிமுக என்ற பெயரையும், இரட்டை இலைச் சின்னத்தையும் பயன்படுத்தி யுள்ளனர்.
இது தேர்தல் ஆணையத்தின் விதிமுறை களை மீறும் செயல். இதுகுறித்து யாரா வது புகார் கொடுத்தால் முதலமைச்ச ரும், அவர் தலைமையிலான அமைச்ச ரவையும் பதவி விலக நேரிடும்" என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

# லொறி கவிழ்ந்ததில் 400 கோழிகள் பலி

சுவிட்சர்லாந்து நாட்டில் நிகழ்ந்த வீதி விபத்தில் லொறி ஒன்று கவிழ்ந்ததில் 400 கோழிகள் உயிரி ழந்துள்ளன.
சுவிஸில் உள்ள யுவேர்டன் நகரில் இருந்து பேர்ன் நகருக்கு கனரக லொறி ஒன்று 4,500 கோழிகளை ஏற்றிக்கொண்டு நேற்றுப் புறப்பட்டது.பேர்ன் நகரை இணைக்கும் நெடுஞ்சாலையில் லொறி சென்று கொண்டு இருந்தபோது, திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாகச் சென்று கவிழ்ந்துள் ளது.இந்த விபத்தில் சாரதி படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துரதிர்ஷ்டவசமாக லொறியில் அடைக்கப்பட்டி ருந்த 400 கோழிகள் உயிரிழந்தன.
விபத்துக் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் கவிழ்ந்து கிடந்த லொறியை அப்புறப்படுத்தி, எஞ்சிய கோழிகளை மற்றொரு லொறி வழியாக பேர்ன் நகருக்கு அனுப்பி வைத்தனர். (இ)

# தரையில் மோதிய பாகிஸ்தான் ஜெட்



பாகிஸ்தான் விமானப்படைக்குச் சொந்தமான ஜெட் விமானம் ஒன்று நடுவானில் பறந்துகொண்டிருந்த போது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் தரையில் மோதி வெடித்து சிதறியுள்ளது.
இதில், ஜெட் விமானத்தின் விமானி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.
விபத்துக் குறித்து பாகிஸ்தான் விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், "கொமாண்டர் மொஹம்மத் ஷாஜாத், ஜெட் விமானத்தை இயக்கிக்கொண்டிருந்த போது விமானத்தில் தொழில்நுட் பக் கோளாறு ஏற்பட்டது.
விபத்தின் போது விமானத்தை விட்டு வெளியேறாத விமானி மொஹம்மத் ஷாஜாத் உயிரிழந்துள்ளார்.
விபத்துக் குறித்து தகவலறிந்த அதிகாரிகள், சம்பவ இடத்திலிருந்து விமானியின் உடலை மீட்டுள்ளனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ)

# ஆவரங்கால் மத்தி, இந்து இளைஞர் அசத்தல்







கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவந்த கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற இறுதியாட்டங்களில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், 'பி' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் சம்பியன்களாகின.

முதலில் 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், 25:18, 25:20, 25:23 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலை பெற்று, 3:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

பின்னர் நடைபெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி யூத் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மூன்று சுற்றுக்களிலும் முறையே 25:15, 25:17, 25:20 என்ற புள்ளிக்கணக்கில் ஆதிக்கம் செலுத்தி 3:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தையும் வசப்படுத்திக்கொண்டது. (ஐ)




# 400 மீற்றர் தடையோட்டம் நோர்வேக்குத் தங்கம்

16ஆவது உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்துத் தலைநகர் லண்டனில் நடந்துவருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் இரவு மழைக்கு மத்தியில் நடந்த ஆண்களுக்கான 400 மீற்றர் தடை ஓட்டத்தில் 25 வயதான நோர்வே வீரர் கார்ஸ்டென் வார்ஹோல்ம் 48.35 விநாடியில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தைத் தனதாக்கினார்.

துருக்கி வீரரான யாஸ்மனி கோபெல்லா 48.49 விநாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஒலிம்பிக் சம்பியனான அமெரிக்காவின் கெர்ரோன் கிளமென்ட் 48.52 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

பெண்களுக்கான குண்டு எறிதலில் 28 வயதான சீனாவின் கொங் லிஜியாவ் 19.94 மீற்றர் தூரம் எறிந்து தங்கப்பதக்கம் வென்றார். ஒலிம்பிக் மற்றும் உலகப் போட்டிகளில் மொத்தம் 5 வெள்ளிகள், ஒரு வெண்கலம் வென்ற கொங் லிஜியாவ்க்குத் தங்கப் பதக்கம் நீண்ட நாட்களாகக் கைநழுவிப் போனது. அந்த ஏக்கத்தை அவர் இந்த முறை தீர்த்திருக்கிறார்.

ஹங்கேரி வீராங்கனை அனிதா மார்டோன் 19.49 மீற்றர் தூரம் வீசி வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்க வீராங்கனை மிச்செல் கார்ட்டர் 19.14 மீற்றர் தூரம் வீசி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை பிலிஸ் பிரான்சிஸ் 49.92 விநாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். பக்ரைன் வீராங்கனை சல்வா இட் நாசர் 50.06 விநாடியில் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும், அமெரிக்க வீராங்கனை அலிசன் பெலிக்ஸ் 50.08 விநாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர். (ஐ)



# 'பிக்பாஸ்' வீட்டுக்குள் மர்மநபர்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மிகவும் பரபரப்பாக ஓடிக்கொண்டிருந்த ஒரு நிகழ்ச்சி 'பிக்பாஸ்'. சமீப நாட்களாக இந்த நிகழ்ச்சி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெறவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று வெளியாகியுள்ள 'புரொமோ'வில் 'பிக்பாஸ்' வீட்டுக்குள் ஒரு மர்ம நபர் நுழைந்துள்ளார். அவர் வீடு முழுவதும் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறார். சுத்தமும் செய்கிறார். வீட்டுக்கு வந்தவருக்கு காபி தர மாட்டீர்களா என்று கேட்கிறார்.

இவர் யார், எதற்காக வீட்டுக்குள் வருகிறார் என்ற செய்தி எதுவும் தெரியவில்லை. இந்த 'புரொமோ' தற்போது அனைவரையும் யார் இவர் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. (ஒ)


# ஓவியாதான் என் வீட்டு மருமகள்

'பிக்பாஸ்' நிகழ்ச்சி மூலம் அனைவரின் மனதையும் தொட்டவர் ஓவியா.

இவரின் இயல்பான குணத்தையே அனைவரும் விரும்புகிறார்கள். இதில் கலந்துகொண்ட சகபோட்டியாளரான ஆரவ் மீது ஓவியாவுக்கு காதல் மலர்ந்தது. காதலை தெரிவித்தும் ஆரவ் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால், இருவரும் ஆரம்பத்திலிருந்தே நல்ல நண்பர்கள். பிக்பாஸை விட்டு வெளியே வந்தாலும், "இன்னும் ஆரவை நான் காதலிக்கிறேன்" என ஓவியா கூறிவருகிறார்.

இந்நிலையில் ஆரவின் அம்மா ஓவியாவின் காதலுக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார் என ஒரு செய்தி அடிபடுகிறது. ஆரவ் சொல்லிவிட்டால் போதும் ஓவியாதான் என் வீட்டு மருமகள் எனக் கூறியுள்ளாராம். (ஒ)



# கமல் அதிரடி

நாட்டுக்கு ஊழியம் செய்வோரை கேலி செய்யாதே என கமல்ஹாசன் டுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் சமீபகாலமாகவே டுவிட்டரில் அரசியல் தொடர்பான கருத்துகளை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் நேற்று முரசொலி விழாவில் பங்கேற்ற பின்னர் டுவிட் செய்துள்ள கமல்ஹாசன்,

"விம்மாமல் பம்மாமல், ஆவன செய். புரட்சியின் வித்து தனிச் சிந்தனையே. ஒடி எனைப்பின்தள்ளாதே களைத்தெனைத்தாமதிக்காதே கூடி நட, வெல்வது நானில்லை நாம் என்று பதித்துள்ளார்.

இதற்கு முன்னதாக விழாவில் பேசிய போது, ரஜினியுடன் சேர்ந்து நானும் மேடைக்கு செல்லாமல் இருந்து விடலாம் என்றுதான் நினைத்தேன், பின்னர்தான் "தற்காப்பு அல்ல தன்மானமே முக்கியம்" என்று முடிவு செய்தேன் என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)





# மீண்டும் இணைந்த கூட்டணி

சிம்பு இயக்கவிருக்கும் அடுத்த படத்தின் மூலம் கௌதம் மேனன் - சிம்பு கூட்டணி மீண்டும் இணைந்திருக்கிறது.

'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தைத் தொடர்ந்து, சிம்பு அடுத்ததாக அவரது இயக்கத்திலேயே புதிய படம் ஒன்றில் நடிக்க முடிவு செய்திருக்கிறார்.

அவர் இயக்கவிருக்கும் புதிய படம் ஆங்கிலத்தில் மட்டுமே உருவாகிறது என்றும், பின்னர் தமிழ் மற்றும் சில முக்கிய மொழிகளில் அந்தப் படம் மொழிமாற்றம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் படத்தின் திரைக்கதையை தீவிரமாக எழுதி வருகிறார் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு வசனங்களை எழுதுவதன் மூலம் இயக்குநர் கௌதம் மேனனுடன் சிம்பு மீண்டும் இணைந்திருக்கிறார்.

இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். சந்தோஷ் சிவன் இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்யவிருக்கிறார். அண்டனி படத்தொகுப்புப் பணிகளை மேற்கொள்கிறார். இந்தப் படத்தில் பாடல்கள் கிடையாது. (உ)

# கடற்படையின் சிறப்புப் பிரிவு யாழில் தரையிறக்கம்



யாழ். குடாநாட்டில் கடற்படைக்கு உதவியாக, கடற்படையின் சிறப்பு படகுப் படையணி கொமாண்டோக்களும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. கடந்த 7ஆம் திகதி பருத்தித்துறைக்கும் மணல்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட 9 பேர், கடற்படை கொமாண்டோக்களின் உதவியுடனேயே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கடற்படையினருக்கு உதவியாக, கடற்படைக்கொமாண்டோக்களை நிறுத்த உத்தரவிட்டுள்ளார். பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரை வடக்கில் களமிறங்கியதுபோல கடல்சார் நடவடிக்கைகளைக் கண்காணிக்க கடற்படைக்கு உதவியாகக் கடற்படையின் சிறப்பு படகுப் படையணி கொமாண்டோக்கள் செயற்படுவர் என்று கூறப்பட்டுள்ளது. (உ)

# 87 பேர் விளக்க மறியலில்



யாழ். குடாநாட்டில் சிறப்பு அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்புத் தேடுதல்களில் இதுவரை கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்களில் 87 பேர் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஒகஸ்ட் 4ஆம் திகதி தொடக்கம், ஒகஸ்ட் 9ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், சுன்னாகம், கோப்பாய், நெல்லியடி, மானிப்பாய், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பகுதிகளில், இந்தத் தேடுதல்கள் நடத்தப்பட்டன. சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் லதீப்பின் வழிகாட்டலின் கீழ், இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்கு, வவுனியா பிரிவுக்கான சிறப்பு அதிரடிப்படை கட்டளை அதிகாரி திசநாயக்கவின் தலைமை தாங்கியிருந்தார். (உ)

## சவால்களுக்கு மத்தியிலும் பொருளாதார வளர்ச்சி

சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையின் பொருளாதாரம் பாராட்டத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்திருப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2016ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி அறிக்கை தொடர்பான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் அமைச்சர் உரையாற்றுகையில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளதாக சிலர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களில் எந்த அடிப்படை உண்மையும் இல்லை என்று குறிப்பிட்டார். ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் போது மக்களின் பணம் வீணடிக்கப்பட்டமையினால் நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதனைச் சீர்செய்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் நடைமுறைப்படுத்த நல்லாட்சி அரசாங்கத்தால் முடிந்ததாகவும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## சிறுபோக நெல் நல்ல விளைச்சல்

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை அமோகமாக நடைபெற்றுவருகிறது. கடும் வறட்சிக்கு மத்தியில் குளத்து நீரை நம்பி நெற்செய்கை மேற்கொண்டதன் காரணமாக இந்த நெற்செய்கையில் ஒரு ஏக்கரிலிருந்து ஆகக் கூடுதலாக 35 நெல் மூடைகள் அறுவடை பெறப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
இதற்காக நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு ஏக்கருக்கான அறுவடைக் கூலி ஆறாயிரம் ரூபா வரையில் செலவிடப்படுவதாகக் கூறப்படுகின்றது. (உ)

## இன்றைய கருத்தோவியம்





# உறவைப் பலப்படுத்துவேன்



இலங்கையின் வெளிவிவகாரச் செயலர் பதவியின் மூலம் தாம் அமெரிக்காவுடனான உறவுகளை மேலும் பலப்படுத்தவுள்ளதாக, அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பதவியில் இருந்து விலகும் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கான தூதுவராகப் பணியாற்றிய பிரசாத் காரியவசம், இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில், வோசிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் அவருக்கு நேற்று பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரசாத் காரியவசம், “ இலங்கையின் வெளிவிவகாரச் செயலராக பதவியேற்பது மகிழ்ச்சி தருகிறது. இலங்கை - அமெரிக்கா ஒத்துழைப்பை மிகச் சிறந்த புதிய உச்சத்துக்கு கொண்டு செல்வதற்கு, தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வேன். அமெரிக்காவுக்கான தூதுவர் பதவியை விட்டுச் சென்றாலும், அமெரிக்க- இலங்கை உறவுகளுக்கான தூதுவராகத் தொடர்ந்து இருக்க விரும்புகிறேன்.” என்று கூறினார். (உ)

## யாழில் பல்வேறு நிகழ்வுகள் இந்தியத் தூதரகம் ஏற்பாடு

இந்திய சுதந்திர தினத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவையும், நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தையும் முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.
இதனை முன்னிட்டு நாளை ஸ்ரீதேவி நடித்த ‘மம்’ திரைப்படம் ராஜா திரையரங்கில் பிற்பகல் 2.30 க்கு திரையிடப்படவுள்ளது. இவற்றுக்கான நுழைவுச்சீட்டுக்கள் இலவசம். எதிர்வரும் 16ஆம் திகதி சங்கிலியன் தோப்பில் பெங்களூரைச் சேர்ந்த மஞ்சுநாத் சகோதர்களின் வயலின் இசைக்கச்சேரி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆகஸ்ட் 17ஆம் திகதி மஞ்சுநாத்



சகோதரர்களின் வயலின் இசைக் கச்சேரியும் பயிற்சிப் பட்டறையும், வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நாளை முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நல்லூர் சுகாதாரப் பணிமனையில் தொடர் புத்தக கண்காட்சி ஏற்பாடாகி உள்ளது. இதில் இலங்கை, இந்திய பதிப்பகங்கள் பங்கேற்பதாக துணை உயர்ஸ்தானிகர் ஏ.நடராஜன் தெரிவித்துள்ளார். (உ)

## குப்பையில் மின்சாரம் நேற்று அங்குரார்ப்பணம்

குப்பையில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலங்கையின் முதலாவது இரண்டு கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் கெரவலபிடியவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று ஆரம்பமாகின.
கழிவுகளை முறையாக அகற்றாத காரணத்தினால் கடந்த காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது. இதற்கு நிலையான தீர்வை வழங்கும் நோக்கிலேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குப்பைகளை வளமாக மாற்றி, மாற்றுத் துறைக்கு பயன்படுத்தும் முறை இலங்கையில் இது வரை இடம்பெறவில்லை. வத்தளை, கெரவலபிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்துக்கு கே.சி.எச்.டி லங்கா ஜேன்ங் நிறுவனமும் வெஸ்டர்ன் பவர் நிறுவனமும் 27 பில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளன. (உ)

## உயர்கல்விக்கான கடன்
# எதிர்காலத்துக்கான முதலீடே

உயர்கல்விக்காக கடன் வசதிகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக பிரதம ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதன் பலாபலன்கள் எதிர்கால இலங்கைக்குச் சிறந்த முதலீடாக அமையுமென்று மொரட்டுவ பல்கலைக் கழகத்துக்காக ஹோமாகம தியகம பிரதேசத்தில் நிறுவப்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது பிரதமர் குறிப்பிட்டார்.
இந்நிறுவனம் ஆயிரத்து 250 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சகல பிள்ளைகளுக்கும் 13 வருட அடிப்படை கல்வி கட்டாயமாக்கப்படவுள்ளது. இந்த காலப் பகுதியில் கடைசி இரண்டு வருடங்களில் சகல மாணவர்களுக்கும் ரொப் கணனிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் கல்வியை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்நுட்ப நிறுவகத்தில் உயர்கல்வி தொடரும் மாணவர்கள் பொறியியல் பட்டத்தைப் பெறுவதற்கான அமைப்பை ஸ்தாபிப்பது அவசியம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (உ)

## நாளை நாளும் கோளும்

12.08.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 27ஆம் நாள்

பஞ்சமி மு.இ 10.08 வரை | உத்தரட்டாதி காலை 06.27வரை | ரேவதி பி.இ. 05.44 வரை | சித்தயோகம் | மரணயோகம்

இராகுகாலம் 09.04-10.34 | சுபநேரம் 03.04-04.34 | எமகண்டம் 01.34-03.04

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் | உதவி | நட்பு | பகை | ஆர்வம் | ஜெயம் | புகழ் | பயம் | அமைதி | யோகம் | இரக்கம் | விவேகம் |

எதிரொலி
Ethiroli

## அடிக்கல் நாட்டுவிழா



திருகோணமலை, முகத்துவாரம் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள ஆரம்ப வைத்திய பராம ரிப்பு பிரிவுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண் மையில் இடம்பெற்றது. திருகோணமலை சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் கிழக்கு மாகாணத்தில் சுகாதார அமைச்சின் முயற்சியில் தேசிய ஒருமைப் பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத் தின் 8.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட் டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!




**2006.08.11**

யாழ்.குடாநாட்டையும், இலங்கையின் தென் பகுதியையும் இணைக்கும் ஏ-9 நெடுஞ்சாலை கால வரையறையின்றி மூடப்பட்டது. இதனால் யாழ்ப் பாண மக்கள் குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டனர்.

## ரவி எல்லோருக்கும் நல்ல பாடம்



நல்லாட்சி அரசாங்கத் தின் பெயரை வைத்துக் கொண்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட ஊழல் மோசடியில் ஈடுப் படுவோருக்கு ரவி கரு ணாநாயக்கவின் பதவி விலகல் ஒரு பாடமாக அமைந்திருக்கின்றது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் தெரிவித்தார். ஹட்டனில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப் பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி காலப்பகுதியில் இலங்கையை - நல்லிலங் கையாக ஊழல் மோசடி அற்ற ஒரு நல்ல நாடாக மாற்றியமைக்க வேண்டும் என்பது அவரின் எண்ண மாகும்.

இந்த வகையில் கடந்த ஆட்சியாளர்கள் செய்த ஊழல் நடவடிக்கைகள் வெளிக்கொண்டு வரப் பட்டு சட்ட நடவடிக்கை களும் எடுக்கப்பட்டும் வந்தன. அதேபோன்று ஆளும் அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக பதவி விலக்கல் மற்றும் சட்ட நடவடிக் கைகள் முன்னெடுக்கப்ப டும் என்பதும் ஜனாதிபதி யின் செயற்பாடாக உள் ளது என்றும் அவர் தெரி வித்தார். (எ)

## உள்ளூர் உற்பத்தி விற்பனைக் கண்காட்சி



தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங் கள் அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருட் களுக்கான விற்பனைக் கண்காட்சி இன்று முற்பகல்10 மணியளவில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாகி யது. இக் கண்காட்சியை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் ஆரம் பமாகிய இக் கண்காட்சியில் யாழ்.மாவட்ட உற்பத்தி யாளர்களால் உருவாக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டன. இக் கண்காட்சியை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மு.ப 10 மணிமுதல் 7 மணி வரை பார்வையிடலாம். (உ-16)

## மருத்துவர்களுக்கு பட்டப்பின் டிப்ளோமா

வட மாகாண மருத்து வர்களுக்கான பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை நெறிகளை யாழ். பல்கலைக்கழகத்தை நிலையமாகக்கொண்டு ஆரம்பிப்பதெனத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. சுகா தார அமைச்சில்இடம்பெற்ற வடமாகாண மருத்துவர் சங்கத்தின் பிரதிநிதிகளு டன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன நடத்திய சந்திப்பில் இது தொடர்பில் கவனம் செலுத் தப்பட்டது. இதற்கு உயர் கல்வி அமைச்சும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவும் இணக்கம் தெரி வித்துள்ளன. வடக்கின் வைத்தியசாலைகளை அபி விருத்தி செய்வதற்காக 900 கோடி ரூபா ஒதுக் கப்பட்டுள்ளதென இதன் போது அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (உ)

**நான் ஒரு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்படு கிறார். அங்கே அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக் கள அதிகாரிகள் அமைச்சரை துளைத்து எடுக்கிறார்கள். கடந்த காலங்களில் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத அளவில் காரியங்கள் நடைபெறுகின்றன. இது நல்லாட்சி அரசாங்கம் என்பது இன்று நிரூபிக்கப்பட்டு விட்டது.- என்றார். (எ)

**உள்ளூர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையாக காணப்படுகிறது.யுத்தத்துக்கு முன்னரான காலப்பகுதியில் இயங்கி வந்த பல தொழிற் சாலைகள் தற்போது இயங்குவதில்லை. இதனால் வேலைவாய்ப்புகள் குறைவடைந்து காணப்படுகின்றன. சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு எம்மாலான பல உதவிகளை வழங்கி வருகின்றோம். அரசாங்கமும் சுய தொழில் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து பல திட்டங்களையும் நடத்தி வருகிறது. சுயதொழில் கண்காட்சிகள் மூலம் எமது மாவட்டத்தில் எவ்வாறான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறியவும், உற்பத்தி பொருட்களை எங்கு பெற லாம் என்பதையும் அறிய உதவுகிறது என்றார். (எ-16)

**கூண்டோடு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்காலத்தில் பொதுமக்களின் பணம் வீணடிக்கப்பட்டமையினால் நிதி நெருக்கடி ஏற்பட்டது. இதனைச் சீர்செய்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் நடைமுறைப்படுத்த நல்லாட்சி அரசாங்கத் தால் முடிந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-09)

**எல்லாம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். சூட்சுமமாகத் திருடப்பட்ட பணம் எங்கு சென்றது என்பதை முழுமையாக தேடியறிய வேண்டும். அதுவே வெளிப்படைத் தன்மை.

ஆகவே ரவி கருணாநாயக்கவின் இராஜினாமாவுடன் அனைத்தும் நிறைவடைந்து விட்டது என அரசாங்கம் கருதுமாயின் அதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். (எ)

**சமுர்த்தி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் நிகழ்வில் இன்று உரையாற்றிய ஜனதிபதி மைத்திரிபால சிறிசேன சமுர்த்தி உதவு தொகை ஒருபோதும் குறைக்கப்பட மாட்டாது என்று தெரி வித்துள்ளார்.

அண்மையில் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதோடு மற்றும் உதவு தொகையும் குறைக்கப்படுவதாக அறிவிப்புக்கள் வெளியாகிய நிலையில் நாடு பூராகவும் மக்கள் பிரதேச செயலகங் களை முற்றுகையிட்டு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் சமுர்த்தி அமைச்சர் மற்றும் ஜனாதிபதியிடமிருந்து இன்று இந்த அறிவிப்பு வெளி யிடப்பட்டுள்ளது. (எ)





யாழ்.மண்ணில் முதன்முறையாக
சினிமாப் பாடல்களுடன்...

பிரபல தென்னிந்தியப் பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்

இணைந்து வழங்கும்

'இன்னிசை பாடிவரும்'...

மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு
K.T.பிரசாத்

மாலை 6 மணி
இம்மாதம் ஒகஸ்ட் 12 இல்

டிக்கெட்டுக்கள்
300/=, 500/=, 1000/=

யாழ். ஸ்ரான்லி றோட்,
வெலிங்டன் தியேட்டர் மைதானம்

500/=, 1000/= டிக்கெட்டுகளை
கொள்வனவு செய்பவர்களுக்கு ஆசன வசதி உண்டு.

தொ.பே.: 077 550 4910





தேவி ஜோதிட நிலையம்
உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
பண்டித் அசோக்
துல்லியமாகக் கணித்து
பார்க்கப்படும் விடயங்கள்



கைரேகை, நாம நட்சத்திரம், கல்வி, தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லக்ஷ்மி வசீகரம், திருமண யோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வீட்டில் வதிவிட பிரச்சினை, பயண எதிரிகள், கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனம் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்றுகூடுதல், பில்லி சூனியம் வெட்டப்படும், பாலியல் பிரச்சினை, அதிர்ஷ்ட இலாபம் கிடைத்தல், ஆயுள்வேத மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.

100%

ஒருமுறை எங்களிடம் வாருங்கள்
நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளலாம்.
எல்லா மதத்தவர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

Time: 7.00 a.m. to 7.00 p.m.
Tel.: 077 4160789

கே.கே.எஸ். றோட்,
சந்தை வீதி தெற்கு,
சுன்னாகம்.


இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 11.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.